இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

‘உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். தூய ஆவியாரைப் பழித்து உரைப்பவர் எவரும் எக்காலத்திலும் மன்னிப்புப் பெறார்; அவர் என்றென்றும் தீராத பாவத்திற்கு ஆளாவார். ஆனால் மக்களுடைய மற்றப் பாவங்கள், அவர்கள் கூறும் பழிப்புரைகள் அனைத்தும் அவர்களுக்கு மன்னிக்கப்படும்.” ‘இவனைத் தீய ஆவி பிடித்திருக்கிறது’ என்று தம்மைப் பற்றி அவர்கள் சொல்லி வந்ததால் இயேசு இவ்வாறு கூறினார். (மாற்கு 3:28-30)

# மானுடமும் நமது பொதுவான இல்லமாகிய இந்தப் பூமியும் உண்மையில் காயப்பட்டிருக்கின்றன

## திருத்தந்தை பிரான்சிஸ்



இன்று மானுடமும் நமது பொதுவான இல்லமாகிய இந்தப் பூமியும் உண்மையில் காயப்பட்டிருக்கின்றன! எத்தனையோ போர்கள், அனைத்தையும் இழந்து வெளியேறும் நிலைக்குத் தள்ளப்பட்டவர்கள் எத்தனையோ பேர். பல குழந்தைகள் வன்முறையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தனது கவலையை வெளிப்படுத்தினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கடந்த மே 27, நாளன்று, தாய்லாந்திலிருந்து வந்திருந்த புத்தமதத் துறவியரின் பிரதிநிதிகள் குழுவொன்றை திருப்பீடத்தில் சந்தித்து உரையாடினார் திருத்தந்தை பிரான்சிஸ். அப்போது திருத்தந்தை, பல்வேறு சவால்களுக்கு மத்தியில், அந்தந்த மத மரபுகளில் ஆழமாக வேரூன்றியவர்களும், அனைவருடனும் இணைந்து பணியாற்றத் தயாராக இருப்பவர்களும் நம்பிக்கையின் கதிரை நம்பிக்கையிழந்த இந்த மனிதகுலத்திற்குக் கொண்டு வர முடியும் என்று நாம் உறுதியாக நம்புகிறோம் என்றும் கூறினார். அவர்களோடு கலந்துரையாடிய வேளையில் மூன்று முக்கிய விடயங்களை விரிவாக எடுத்துரைத்தார்.

### தனித்த நிலையில் மீட்பு இல்லை

முதலில், யாரும் தனித்த நிலையில் மீட்கப்பட முடியாது என்றும், நாம் ஒருவருடன் ஒருவர் இணைந்திருப்பதாலும், ஒருவரையொருவர் சார்ந்திருப்பதாலும் நாம் ஒன்றிணைந்த நிலையில் மீட்கப்பட முடியும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார் திருத்தந்தை.



புத்தமதத் துறவியரின் பிரதிநிதிகள் குழுவொன்றை திருப்பீடத்தில் சந்திக்கும் திருத்தந்தை

இந்த உண்மையின் ஒளியில் அமைதியையும் உடன்பிறந்த உறவையும் நிலைநிறுத்தும் நட்பை மேம்படுத்துவதற்கு குடிமைச் சமூகம், பிற மதங்களைச் சேர்ந்தவர்கள், அரசுகள், அனைத்துலக அமைப்புகள், கல்வி மற்றும் அறிவியல் சமூகங்கள் மற்றும் ஆர்வமுள்ள அனைத்துத் தரப்பினரும் இணைந்து பணியாற்றுமாறு நான் உங்களை கேட்டுக்கொள்கிறேன் என்றும் குறிப்பிட்டார் திருத்தந்தை.

### இளையோர் மற்றும் குழந்தைகளுக்குக் கல்வி

இரண்டாவதாக, ஒருவருக்கொருவர் மற்றும் சுற்றுச்சூழலுடன் அக்கறை, மற்றும் உறவுகளைப் பகிர்ந்துகொள்வதில் அனைவருக்கும், குறிப்பாக இளைஞர்கள் மற்றும் குழந்தைகள் கல்வி கற்பதன் முக்கியத்துவத்தை நீங்கள் வலியுறுத்தினீர்கள் என்று எடுத்துக்காட்டிய திருத்தந்தை, அதில் தான் உடன்பட்டிருப்பதாகவும், இதனையே தானும் வலியுறுத்த விரும்புவதாகவும் கூறினார்.

### மனதையும் இதயத்தையும் தூய்மையாக்கும் செபம் மற்றும் தியானம்

மூன்றாவதாக, இறைவேண்டலும் தியானமும் மனதையும் இதயத்தையும் சுத்திகரித்து தூய்மையாக்குவது போன்று, அவை அன்பான இரக்கம், பரிவு மற்றும் மன்னிப்பு ஆகியவற்றை உருவாக்குகின்றன என்றும், அச்சூழலில் அங்கு வெறுப்பும் பழிவாங்கும் உணர்வும் மாற்றம்பெற்று, மற்றவர்கள் மற்றும், இப்பூமியின் மீதான மரியாதை மற்றும் அக்கறையின் உணர்வை உருவாக்குகிறது என்றும் விளக்கினார் திருத்தந்தை.

*செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்*

# சிப்பாங், சுங்கை பிளேக்கில் உலக் குழந்தைகள் தினக் கொண்டாட்டம்

**சிப்பாங்,** “இதோ! நான் அனைத்தையும் புதியது ஆக்குகிறேன்” (தி.வெ. 21:5) என்ற கருப்பொருளுடன், மே 25-26, 2024 அன்று உரோமில் திருத்தந்தை பிரான்சிஸ் முதல் உலக குழந்தைகள் தினத்தைத் தொடங்கி வைத்தார். கடவுளின் பார்வையில் "குழந்தைகளாகிய நீங்கள் விலையேறப் பெற்றவர்கள்" (எசாயா 43:4) என்பதை திருத்தந்தை குழந்தைகளுக்கு எழுதிய கடிதத்தில் குடும்பங்களுக்கும் உலகளாவிய திருஅவைக்கும் மகிழ்ச்சியின் ஆதாரமாக குழந்தைகளின் பங்கு உள்ளதாகப் பெருமிதம் கொண்டார்.

இங்கே கோலாலம்பூர் உயர்மறைமாவட்டத்தில், சிலாங்கூரில் சிப்பாங்கில் உள்ள உள்ள சுங்கை பிளேக் எனும் இடத்தில் உள்ள தூய குழந்தை இயேசுவின் சிற்றாலயத்தில் கடந்த மே 25 சனிக்கிழமை உலக குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டது. அன்று, அருள்பணி எட்வின் பீட்டர் அவர்களின் ஆன்மீக வழிகாட்டுதலுடன், குழந்தைகளுக்கான நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டன. இக்கொண்டாட்டத்தில் தாய் பங்கான, போர்ட்டிக்சனில் அமல உற்பவி அன்னை பங்கில் இருந்து 40 சிறுவர்களும் சுங்கை பிளேக் சுற்றுவட்டாரத்தில் இருந்தும் சிறுவர்கள் கொண்டாட்டத்தில், குறிப்பாகத் திருப்பலியில் பங்கேற்றனர்.

குழந்தைகளின் தயாரிப்பில் கொண்டாடப் பட்ட சனிக்கிழமை மாலை திருப்பலியின் தொடக்கத்தில், வத்திக்கான், உரோமில் கூடியிருந்த உலகக் குழந்தைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வண்ணமயமான மெழுகுவர்த்திகளுடன் 5 குழந்தைகள் வந்தனர். அருள்பணி எட்வின் பீட்டர் அவர்கள், “நாம் இந்த சிற்றாலயத்தில் குழந்தைகளுடன் குழந்தைகள் தினம் கொண்டாடுகிறோம் என்றாலும், திருத்தந்தை பிரான்சிஸ் உடன் உரோமில் கூடியிருந்த அனைத்து குழந்தைகளுடன் நாம் ஒன்றுபட்டுள்ளோம்’ என்று கூறினார். அருள்பணி எட்வின் பீட்டர் தமது மறையுரையில், குழந்தைகளுக்கான திருத்தந்யின் செய்தியின் சுருக்கத்தை வாசித்தார். குழந்தைகளின் ஆசீர்வாதத்துடனும், குழந்தைகளுக்கான திருத்தந்தையின் மன்றாட்டுடனும் திருப்பலி நிறைவுற்றது.



அன்று சிறுவர்களுக்கென சில சிறப்பு



நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டன.

திருப்பலியின் போது. ஐந்து சிறுவர்கள் உரோமையில் கூடியுள்ள சிறுவர்களைப் பிரதிநிதித்து ஐந்து எரியும் மெழுகுத் திரிகளைப் பவனியாகக் கொண்டு வந்தனர்.

திருப்பலியின் போது, சிறுவர் புனிதர்கள் மன்றாட்டும் நற்கருணை ஆராதனையும் இடம்பெற்றன. திருப்பலியின் இறுதியில், பெற்றோரும் சிறுவர்களும் உணவு விருந்து பசரிப்பில் கலந்து, இல்லம் திரும்பினர். சிற்றாலயத்தின் தலைவர் திரு ரீகன் சவரிமுத்து அவர்கள் பங்குத்தந்தைக்கும் பெற்றோர்களுக்கும், வருகைத்தந்த அனைவருக்கும் நன்றி நவில்ந்தார். சுங்கை பிளேக் குழந்தை இயேசு சிற்றாலயத்தில் இக்கொண்டாட்டம் ஒரு வரலாறு பதித்தது என்றால் மிகை யாகாது.

# கூலாய், கிறிஸ்து அரசர் பங்கில் பெந்தகோஸ்து பெருவிழாவையொட்டி சிறப்பு சொற்பொழிவு நடைபெற்றது

**கூலாய், ஜொகூர்:** கூலாய் கிறிஸ்து அரசர் பங்கின் தமிழ் திருத்தூதுப் பணிக்குழுவினர், பெந்தகோஸ்து பெருவிழா கொண்டாடத்தின் தயாரிப்பாக மூன்று வழிகாட்டுதலின் உதவியோடு, நெருங்கி வரும் பெந்தகோஸ்து பெருவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட இந்நிகழ்வில், ஒவ்வொரு நாளும் ஏறக்குறைய 80-க்கும்



நாள் நவநாள் இறைவேண்டல் மற்றும் ஆராதனைக்கு ஏற்பாடு செய்தனர்.

மே 13 முதல் 15, 2024 வரை, பங்கின் அணைத்து உறுப்பினர்களோடு, இளைஞர்களின் பங்கெடுப்பில் செபமாலை, புகழ் ஆராதனை, இறைவார்த்தைப் பகர்வு மற்றும் சொற்பொழிவு ஆகியவற்றின் மூலம் தேவாலயத்தின் அரங்குகள் எதிரொலித்தன.

பங்கு தந்தையான அருள்பணி மத்தேயு புன் சாங் யோங் அவர்களின் மேற்பட்ட மக்கள் ஆர்வமுடன் பங்குகொண்டு சிறப்பித்தனர்.

மேலும், அருள்பணி ஜோன் ஆனந்தன் OFM Cap, பேரருட்தந்தை ஜேம்ஸ் இராஜேந்திரன் மற்றும் திருத்தொண்டர் அருமைதாஸ் ஆகியோரின் அருளடையாளங்கள் தூய ஆவியின் கொடைகள் மற்றும் கனிகள் பற்றிய சொற்பொழிவு ஒரு புத்துணர்ச்சியூட்டும் பரிமாணத்தைச் உருவாக்கியதாக உணரப்பட்டது.

*-மார்க் மரியதாஸ் கூலாய்*

# கூலிம் திரு இருதய ஆண்டவர் பங்கில் மும்மொழிகளில் தலைமைத்துவப் பயிற்சி

**கூலிம் கெடா:** கடந்த 5.5.24 கூலிம் திரு இருதய ஆண்டவர் பங்கில் **"உன் கூடாரத்தின் இடத்தை விரிவாக்கு. (எசாயா 54:2)".** கருப்பொருளில், பங்கில் பணிப்புரியும் அனைத்து பணிக்குழு தலைவர்களுக்கும் வருங்கால தலைவர்களுக்கும் சிறப்பான முறையில் பங்கு மேய்ப்புப்பணிக்குழுவால் தலைவர்கள் உருவாக்கப்பயிற்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இப்பயிற்சியில் 124 மாவட்டத்தை சேர்ந்த சகோ. மைக்கல் அந்தோணி அவர்களால் வழங்கப்பட்டது.

மேலும் சீன மொழியில் கோலாலம்பூர் மாமறைமாவட்டதை சேர்ந்த சகோ. மார்க் அங் அவர்களும் ஆங்கில மொழியில் ஜோகூர் மறைமாவட்டதை சேர்ந்த திருத்தொண்டர் தாஸ் அவர்களால் சொற்ப்பொழிவுகள் நடத்தப்பட்டன. 'உன் கூடாரத்தை அறிந்துகொள், உன் கூடாரத்தை பழுது பார்த்து புதுப்பி மற்றும்




தலைவர்கள் கலந்துக்கொண்டனர். தமிழ், ஆங்கிலம், சீனம் ஆகிய 3 மொழிகளில் இப்பயிற்சி நடைப்பெற்றது.

இப்பயிற்சியின் ஆரம்ப நிகழ்வாக தேசிய மொழியில் காலை 8.30மணி முதல் 9.00 மணி வரையில் சபாவை சேர்ந்த அருட் சகோதரர் மெஜோரி சைமன் அவர்களுடன் இளைஞர் குழு இணைந்து புகழ் ஆராதனை நடத்தினர். காலை உணவுக்கு பின் அவரவர் மொழிகளில் சொற்ப்பொழிவுகள் துவங்கப்பட்டது. தமிழில் கோலாலம்பூர் மாமறை

உன் கூடாரத்தை விரிவாக்கு' என்ற 3 அமர்வுகளில் தலைவர்கள் எவ்வாறு தங்கள் தலைமைத்துவதையும் அழைப்பையும் அறிந்துக்கொண்டு, குறையுள்ள கூடாரத்தை பழுது பார்த்து புதுப்பித்து மேலும் தலைமைத்துவதையும் அழைப்பையும் பணியையும் விரிவாக்க வேண்டும் என்று ஆழமாக எடுத்துரைக்கப்பட்டது. நிறைவாக நற்கருணை ஆராதனையுடன் மாலை மணி 4.30 பங்குத்தந்தை பேரருட்தந்தை ஹென்றி ராஜு அவர்கள் இப்பயிற்சியை நிறைவுசெய்து வைத்தார்

# எத்தனை துன்பம் வந்தாலும் இதயத்தை திறந்து வையுங்கள்

துன்பங்கள் நம்மை மற்றவர்களிலிருந்து தனிமைப்படுத்தி தனித்தீவாக வாழவும், நம்பிக்கையற்றவர்களாக மாறிடவும் ஒரு நாளும் நம்மை நாம் அனுமதிக்கக்கூடாது.

Scholas Occurrentes என்ற கத்தோலிக்க மாணவர் அமைப்பின் அங்கத்தினர்கள் வத்திக்கானில் ஏற்பாடுச் செய்திருந்த 'வாழ்வின் அர்த்தம் குறித்த அனைத்துலக முதல் கூட்டம்' ஒன்றில் கலந்துகொண்டோரை சந்தித்து உரையாடினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

பெரும் துன்பங்களை அனுபவிப்பவர்கள் அதற்கு எவ்வாறு பதில்மொழி வழங்குவது என்பது குறித்து கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த திருத்தந்தை, எத்தனை துன்பங்களை எதிர்கொண்டாலும் தங்கள் இதயங்களைத் திறந்தவர்களாக நாம் செயல்படவேண்டும் என கேட்டுக் கொண்டார். துன்பங்கள் நம்மை மற்றவர்களிலிருந்து தனிமைப் படுத்தி தனித்தீவாக வாழவும், நம்பிக்கையற்றவர்களாக மாறிடவும் ஒரு நாளும் நம்மை நாம் அனுமதிக்கக் கூடாது எனவும் எடுத்துரைத்தார் திருத்தந்தை.

வாழ்வின் அர்த்தத்தைக் கட்டியெழுப்புவதில் கலைகளின் பங்களிப்புப் பற்றி மாணவர் ஒருவர் கேட்டபோது, கலைகள் தொடுவானத்தை திறப்பதுடன், இதயத்தையும் விரிவாக்குகின்றது என்ற திருத்தந்தை, கலைகள் நம்மை முன்னோக்கி இழுத்துச் செல்வதுடன் நமக்கு விடுதலையும் வழங்குகின்றன என்றார். ஒருவர் விளையாட்டிலிருந்து ஒதுங்கும்போது, அவர் வாழ்வின் அர்த்தத்தை இழக்கும் ஆபத்து உள்ளது என்பதையும் சுட்டிக் காட்டினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கிறிஸ்டோபர் பிரான்சிஸ் – வத்திக்கான்

**"தனிமையில் நடைபோடாமல், நல்ல நட்புணர்வுகளை வளருங்கள்"**
திருத்தந்தை

# அடுத்திருப்பவரை அன்பு செய்வோரே இயேசுவின் சகோதரர்!

இன்று நாம் பொதுக்காலத்தின் 10ஆம் ஞாயிறைக் கொண்டாடுகிறோம். பொய்மையிலிருந்து விடுபட்டு உண்மைக்காக, உண்மையில் வாழ இன்றைய வாசகங்கள் நம்மை அழைக்கின்றன. கடவுள் இவ்வுலகை நல்ல நிலையில்தான் படைத்தார். அவர் படைத்த அனைத்தும் நன்றாக, மிகவும் நன்றாக இருக்கக் கண்டார் என்றும் அலகையின் வஞ்சகத்தால்தான் பாவமும் அதன் வழியாகச் சாவும், மற்ற எல்லாத் துன்பங்களும் வந்தன என்றும் அறிவுறுத்துகிறது.

இரண்டாம் வாசகமானது இந்த உடல் அழிந்து போனாலும் கடவுள் அளிக்கும் வீட்டில் நிலையாக, இருப்போம் என விவரிக்கிறது

நற்செய்தியில் மூன்று காரியங்களை பார்க்கலாம். முதலாவது உற்றார் உறவினர்கள்கூட இயேசுவைப் புரிந்து கொள்ளவில்லை. 20வது வசனத்திலே 'அவர் மதி மயங்கிவிட்டார்' என்று மக்கள் கூறிய பொழுது அவருக்கு மனக் கோளாறு ஏற்பட்டுள்ளது என்ற பொருளில் அல்ல. மாறாக அவர் தம்மையே மறந்து தம் பணியிலே அதிக ஆர்வம் காட்டுவது சரியில்லை எனும் கருத்திலே சொல்லியிருப்பதாக கருதலாம்.

இன்றும் நமது மத்தியிலே அநேகர் உடல் இன்பங்களை மறந்து, உலகச் செல்வங்களைத் துறந்து, மெய்வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் அயராது, உடல் ஆரோக்கியம் காணாது காரியத்தில் கருமமே கண்ணாகி அர்ப்பணிப்புப் புரியும் நற்சேவகர்ளை புரிந்து கொள்ளாது நாம் இவர்களை முட்டாள்களென்றும் பைத்தியக்காரர்களென்றும் என்று சொல்லி நகைப்பதில்லையா? இறையரசுப் பணிக்காக தன்னையே மறந்து உழைத்த இயேசுவை அவர் உறவினர்களே சரிவரப்புரிந்து கொள்ளாத போது நாம் எம்மாத்திரம்.

இரண்டாவது என் உறவினர் யார் எனக் கேட்கிறார். ஆம், தம்மை சூழ்ந்து இருப்பவர்களை நோக்கி, "கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவர்களே என் தாயும் சகோதரர்களும் ஆவர்" என்கிறார். எனவே, கடவுளுக்கு உகந்த பிள்ளைகளாக இருக்க வேண்டுமாயின் அவரின் வார்த்தையின்படி நடப்பவர்களே ஏற்புடையவர்கள் என தெள்ளத் தெளிவாக தெளிவுபடுத்துகிறார். இதற்கு பக்க பலமாக இருப்பது திருப்பலியில் பங்கெடுத்து




நற்கருணை சிறப்பாகும். அத்தோடு ஏழை எளிய வர்கள், கைம்பெண்கள், நோயாளிகளுக்கு ஆவன செய்வதாலும் ஆகும்.

மூன்றாவது "தூய ஆவியை பழித்து உரைப்பவர் எவரும் எக்காலத்திலும் மன்னிப்புப் பெறார். அவர் என்றென்றும் தீராத பாவத்திற்கு ஆளாவார்" என எச்சரிக்கிறார். இயேசு ஒருவரையும் தீர்ப்பிடுவதில்லை என யோவான் 8:15 வாசிக்கிறோம். ஆனால் இயேசுவில் செயல்படும் ஆவியைப் பழிக்கும் போது எவ்வாறு ஒருவன் மீட்படைய முடியும்? மனதைக் கல்லாக்கி ஒளியை வெறுத்து, இருளைத் தேடுபவருக்கு எவ்விதம் மன்னிப்பு அருளப்படும்?

எனவே தூய ஆவியை பழிப்பது என்பது தனது பாவ நிலையை ஏற்காது மன்னிப்பை தேடாத நிலை. மன்னிக்கும் ஆவியை பழிக்கும் போது எவ்வாறு மன்னிப்பு பெற முடியும். ஆக, இன்றைய அனைத்து வாசகங்களும் இறைவனுக்கு உகந்த பிள்ளைகளாக வாழ எத்தகைய எதிர்ப்புக்களை கடந்து வர வேண்டும் எனும் சவாலை நமக்கு உணர்த்துகிறது. இன்று நாம் சீடத்துவத்தை ஆழப்படுத்தி தூய ஆவியில் வாழ அழைக்கப்படுகிறோம்.

ஆ.வி. டேவிட், குளுவாங்

**பொதுக்காலம்-10-ஆம் ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | தொ.நூ3: 9-15 |
| திரு.பாடல் | 130: 1-2,304,5-6,7-8 |
| 2-ம் வாசகம் | 1கொரி4:13-5:1 |
| நற்செய்தி | மாற்கு :3:20-35 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 2**